### கோரிக்கைகளை அரசாணைகளாக மாற்றிய அண்ணன் மு.க.ஸ்டாலினுக்கு இதயம் நிறைந்த நன்றிகள்!

# தி.மு.க. அரசின் சாதனைத் திட்டங்களை அறத்துடன் பதிவு செய்கிறேன்!

## வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் நெகிழ்ச்சி!

**சென்னை, மே 25-**

**தி.மு.கழக ஆட்சியில் தோழமைக் கட்சியாய் இருந்து சட்டமன்றத்தில் வென்றெடுத்த அம்சங்களை நன்றியுடன் நினைவு கூர்வதாகவும், தங்களது கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்று அவற்றை அரசாணையாக மாற்றிய அன்றைய முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் தெரிவித்துள்ளார்.**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது: -

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் முதல் தமிழக அமைச்சராக அதுவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்கும் அன்பு இளவல் பெருமதிப்பிற்குரிய தோழர் வன்னியரசுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

அர்ப்பணிப்பும் ஆளுமையும் கண்ணிய மான தோழமைப்பண்பும் நிறைந்தவர். சாதிய எதிர்ப்புக்களத்தில் காயங்களையும் ரணங்களையும் சுமந்தவர். தலைவரின் நம்பிக்கைக்குரிய முன்னணித் தளபதி தோழர் வன்னியரசு அவர்கள். அவரும் அவரது இணையரும் கட்சிக்கும்தலைமைக்கும்ஆற்றியப்பணிகள் எந்நாளும் நன்றிக்குரியன. தகுதியானவருக்கு அமைச்சர் பதவியை பரிந்துரைத்த தலைவருக்கு நன்றி.

**தி.மு.க. ஆட்சியில்**
**நாம் பெற்ற பயன்!**

இந்தத் தருணத்தில் இந்தத் துறை சார்ந்தும் நம் மக்களின் வாழ்வையும் கண்ணியத்தையும் மேம்படுத்தவும் கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தோழமைக்கட்சியாய் இருந்து சட்டமன்றத்தில் பணியாற்றிட நம் தலைவரும் மக்களும் தந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் நால்வருமாய் சேர்ந்து வென்றெடுத்த அம்சங்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

எமது கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்று அவற்றை அரசாணைகளாக மாற்றிய மேனாள் முதல்வர் அண்ணன் ஸ்டாலின் அவர்கட்கு எனது இதயம் நிறைந்த நன்றியை இந்த தருணத்திலும் மனப்பூர்வமாக பதிவிடுகிறேன்.

தேர்தல் தோல்வியின் போதுகூட கலங்காத என் மனம் இதை எழுதும் போது நன்றியால் கரைகிறது. இந்த நன்றியை பதிவு செய்வது என் அரசியல் வாழ்வின் குறைந்த பட்ச அறம் என நம்புகிறேன். தலைவர் திருமாவி டம் கற்று உறுதி செய்துகொண்ட பாடம் எனவும் நம்புகிறேன்.

இந்த சாதனைகளில் நினைவில் இருக்கும் சிலவற்றை மட்டும் பதிவிடுகிறேன்.

**சாதனைகளின் பட்டியல்!**

யாருமே இதை அங்கீகரிக்காமல் போனாலும், பாராட்ட மனமின்றி கடந்து போனாலும் , மாறாக காழ்ப்புணர்ச்சியில் என் மீது அவதூறுகளை அள்ளி வீசினாலும் இந்தச்சாதனைகளை கள்ளங்கபடமற்ற விடுதலைச் சிறுத்தைகளின் காலடிக்கு சமர்ப்பிக்கிறேன். இந்தத் தலைமுறை தியாகத்தலை முறையாக இருக்கட்டும் என தலைவர் விடுத்த அறை கூவலை ஏற்று எதிர்பார்ப்பு ஏதுமின்றி தம் வாழ்வையே அர்ப்பணித்த எண்ணற்ற தோழர்களுக்கு இது சமர்பணம்.

இந்த சாதனைகளை பலமடங்கு விஞ்சக்கூடிய வகையில் தோழர் வன்னியரசு பணியாற்றி வரலாறு படைப்பார் என உறுதியாக நம்புகிறேன்.

தூய்மையான உள்ளத்தோடு வாழ்த்தி மகிழ்கிறேன்.

கடந்த 2021 26 கால கட்டத்தில் மேற்க்கொள்ளப்பட்ட எமது முயற்சிகளும் , சாதனைகளும். ….



**எஸ்.சி - எஸ்.டி, ஆணையம்!**

எமது ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு தேசிய ஆணையம் இருப்பதை போல The Tamilnadu State Commission for the Scheduled Castes and Scheduled Tribes Act 2021 எனும் சட்டம் இயற்றப்பட்டு 22.09.2021அன்று தமிழ்நாடு SC/ST மாநில ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

அரசின் அனைத்து திட்டங்களுக் கான மொத்த நிதி ஒதுக்கங்களில் SC/ST பிரிவினருக்கு உரிய விகிதாச்சார ஒதுக்கீடு கிடைப்பதை சட்டப்பூர்வமாய் உறுதி செய்திட (சிறப்பு உட்கூறு திட்டம்) SC/ST Development Action Plan Act 2024 எனும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒப்பந்த பணி மற்றும் கொள்முதல்களில் எஸ்சி எஸ்டி பிரிவினருக்கு ஒன்றிய அரசு 3% முன்னுரிமை வழங்குவதை போல தமிழகத்தில் அரசு ஒப்பந்த பணி மற்றும் கொள்முதல்களில் 5% முன்னுரிமை வழங்கும் வகையில் Tender Transparency Act ல் திருத்தம் (Amendment) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தொழில் முனைவோருக்கு**
**வங்கிக் கடன்!**

SC/ST பிரிவை சார்ந்த தொழில் முனைவோர் வங்கி கடனில் 35 % முன் ஒப்பளிப்பு மானியம் (Front end Subsidy) பெறும் வகையில் (அதிகபட்சம் 1.5 கோடி) ஆண்டுக்கு 200 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்.

சர்வதேச பல்கலைக்கழகங்களில் நம் மாணவர்கள் பயில 36 லட்சம் முதல் 24 லட்சம் வரை உதவித்தொகை வழங்கும் அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி உதவி திட்டம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**அயோத்திதாசர்**
**குடியிருப்பு - மேம்பாடு!**

பட்டியல் வகுப்பார் குடியிருப்பு களில் இதுவரை நிறைவேற்றப்படாமல் உள்ள அடிப்படை வசதிகளை உருவாக்கிட ஆண்டுக்கு 200 கோடி ஒதுக்கீட்டில் அயோத்திதாசர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டமும், பழங்குடியினருக்கு தொல் குடிகள் குடியிருப்பு மேம்பாட்டு திட்டமும் உருவாக்கப்பட்டு நடைமுறைபடுத்தப் பட்டு வருகின்றன.

மூன்றில் ஒரு பங்கு பொதுமக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் நமக்கு நாமே திட்டத்தில் பட்டியல் வகுப்பார் பழங்குடியினருக்கு மக்கள் பங்களிப்பு அய்ந்தில் ஒரு பங்கு என குறைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் ஈரோடு மாவட்டங்களில் 30 ஆண்டுகளாய் முடங்கி கிடந்த ஈங்கூர் மற்றும் முதலிப்பாளையம் தாட்கோ தொழிற்பேட்டைகள் 200 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு பட்டியல் வகுப்பார் மற்றும் பழங்குடி சமூகங்களைச்சார்ந்த தொழில்முனைவோர் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இந்திய வரலாற்றிலேயே முதன்முறை யாக பட்டியல் வகுப்பார் மற்றும் பழங்குடி சமூகங்களைச்சார்ந்த தொழில் முனைவோரை ஒருங்கிணைக்கும் வகை யில் அவர்களுக்கான தொழில் முனைவோர் மாநாடு (TN BEAT) சென்னை trade centre ல் கடந்த மூன்று ஆண்டுகளாய் மிக வெற்றிகரமாக நடந்து வருகிறது.

கடந்த பல ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் பதிவான பட்டியல் வகுப்பார் மற்றும் பழங்குடிச்சமூகங்களின் மீதான சாதிய வன்கொடுமை தடுப்புச்சட்ட வழக்குகளின் அடிப்படையில் வன்கொடுமைக்கு பலியான குடும்பங்களின் வாரிசுதாரர்கள் கண்டறியப்பட்டு சுமார் 500 பேருக்கு அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. வேலை பெற வயது தகுதி இல்லாதோருக்கு மாதம் ரூ.5000/ ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

வன்கொடுமையில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு இந்தியா முழுவதும் வழங்கப்பட்டு வந்த தீருதவி தொகை ரூபாய் எட்டு லட்சத்தோடு தமிழ்நாட்டில் மட்டும் மாநில அரசின் பங்களிப்பாக நான்கு லட்சம் சேர்த்து மொத்தம் ரூ.12 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இது இந்திய மாநிலங்களில் முன்னுதாரணமானது.

பட்டியல் வகுப்பார் பழங்குடியினர் குடியிருப்புகளில் உள்ள கிராமப்புற கோவில்களில் திருப்பணி மேற்கொள்ள அறநிலையத்துறையால் வழங்கப்பட்ட தொகை ரூபாய் ஒரு லட்சம் என்பது இரண்டு லட்சமாக உயர்வு

தமிழகம் முழுவதும் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் நமது வேண்டுகோளையடுத்து ரூ.3600 லிருந்து 5000 மாக உயர்த்தப் பட்டது.

ஆதிதிராவிடர் நல விடுதிகளின் பழைய கட்டுமான வடிவம் முற்றிலும் மாற்றப்பட்டு நவீன கட்டமைப்பு வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர் உணவு மானியம் 300 ரூபாய் கூடுதலாக உயர்த்தப்பட்டது. மேலும் விடுதிகளின் பெயரும் சமூகநீதி விடுதிகள் என பெயர் மாற்றம் செய்யப்படுள்ளன.

ஏப்ரல் 14 அம்பேத்கர் பிறந்த நாள் சமத்துவ நாள் என அரசு விழாவாக அறிவிப்பு

சென்னையில் திராவிடப் பேரொளியை பண்டித அயோத்திதாசர் மணி மண்டபம் திறப்பு

சிதம்பரத்தில் மறைந்த தலைவர் அய்யா எல்.இளையபெருமாள் நூற்றாண்டு நினைவு அரங்கம்

சென்னை நந்தனத்தில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் நவீன எம் சி ராஜா கல்லூரி மாணவர் விடுதி

அச்சிறுப்பாக்கத்தில் கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டு கிடப்பில் கிடந்த மாவீரன் இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் தற்பொழுது பொலிவுடன் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பரமக்குடியில் மாவீரன் இமானுவேல் சேகரன் மணிமண்டபம் திறப்பு.

சிவகங்கை வேலுநாச்சியார் மணி மண்டபத்தில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அன்னை குயிலி க்கு சிலை நிறுவப்பட் டுள்ளது.

ஆதித்தமிழ் குடிகளின் வசிப்பிடத்தை இழிவுபடுத்தும் காலனி என்ற சொல் அரசு ஆவணங்களிலிருந்து நீக்க அரசாணை.

காஞ்சியில் பன்னாட்டு பௌத்த பண்பாட்டு மையமும், மதுரையில் சமணப் பண்பாட்டு மையமும் நிறுவிடவும் அரசு அறிவிப்பு

இசுலாமியர்களின் மெக்கா பயணம், கிறித்துவர்களின் ஜெருசலேம் பயணம் போல அண்ணல் அம்பேத்கர் பௌத்தம் தழுவிய நாளில் மேற்கொள்ளப்படும் நாக்பூர்தீட்சபூமிபயணமும்புனிதப்பயணமாக ஏற்கப்பட்டு அப்பயணம் மேற்கொள்வோருக்கு அரசு மானியம் வழங்கிட அரசாணை.

இவற்றை பதிவிடுவது கடந்த பாதையை நினைவூட்டவும் இழுத்து வந்த தேரை முன்நோக்கி நகர்த்த வேண்டிய வரலாற்றுக்கடமையை பணிவுடன் சொல்லவுமே.

இவ்வாறு சிந்தனைச் செல்வன் கழக ஆட்சியில் பெற்ற நன்மைகளைப் பட்டியலிட்டுள்ளார்.

### முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில்

# திருச்சி வடக்கு - மத்திய மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் காடுவெட்டி ந.தியாகராஜன் – க, வைரமணி அறிவிப்பு!

திருச்சி, மே. 25-

திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி ந.தியாகராஜன், திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க,வைரமணி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

திருச்சி வடக்கு - மத்திய மாவட்டக் கழகச் செயல் வீரர்கள் கூட்டம் 27.5.2026 புதன்கிழமை காலை 9 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.





இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம், அம்பிகாபதி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ. முன்னிலை வகித்து ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் திருச்சி வடக்கு - மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள், கழக ஆக்கப் பணிகள்,

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஆய்வு நடத்தியும், அதிகாரிகளுக்கு அட்வைஸ் செய்தும் அத்துமீறும் த.வெ.க.வினர்!

# கேலிக்கூத்தாக மாறி வரும் அரசு நிர்வாகங்கள்!

**சென்னை, மே 25-**

**த.வெ.க. ஆட்சி அமைந்த நிலையில் அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து த.வெ.க.வினர் ஆய்வு நடத்தியும், அதிகாரிகளுக்கு அட்வைஸ் செய்தும் அத்துமீறி வரும் செயல் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ள நிலையில் அரசு நிர்வாகங்கள் கேலிக்கூத்தாக மாறி உள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளது. தமிழக சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வென்று ஆட்சியைப் பிடித்துள்ளது. அக்கட்சி தலைவர் விஜய் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். அவருடன் சேர்த்து இதுவரை 35 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுள்ளனர். ஆட்சி அமைத்த நிலையில், த.வெ.க.வினர் தமிழ்நாட்டில் நடத்தும் அலப்பறைகள் எல்லை மீறி சென்று கொண்டிருக்கிறது.**

**முழி பிதுங்கி நிற்கும் தமிழ்நாடு!**

த.வெ.க.வினர் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு மக்கள் பிரதிநிதிகள் செய்ய வேண்டிய வேலைகளை இவர்களே செய்ய தொடங்கியிருப்பது கேலிக் கூத்தாக உள்ளது. எம்.எல்.ஏ.க்கள் செய்ய வேண்டிய பணிகளை த.வெ.க.வினர் என்ற பெயரில் அரசு அலுவலகங்களில் புகுந்து ஆய்வு நடத்த வந்துள்ளோம் என்று வாக்குவாதம் செய்வதை பார்த்தால் சிரிப்பதா அல்லது அவர்களை கண்டிப்பதா என தெரியாமல் தமிழ்நாடே தற்போது விழி பிதுங்கி நிற்கிறது. த.வெ.க. வினரின் சமீபத்திய நிகழ்வுகளை பார்த்தால், ‘குழந்தைகளை காரில் அமர வைத்தால் ஸ்டீரியங்கை திருப்பி விளையாடுவது’ போன்று இவர்களின் செயல்கள் உள்ளதாக விமர்சிக்கப்படுகிறது.

குறிப்பாக, அரசு அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் ஆய்வு என்ற பெயரில் தவெகவினர் அத்துமீறி வருவதாக புகார்கள் எழுந்த வண்ணம் உள்ளது. ஓரிடத்தில் பிரச்சினை என்றால் சம்பந்தப்பட்ட மாவட்ட எம்.எல்.ஏ., அமைச்சர்கள், மேயர், ஆட்சியர், அரசு அதிகாரிகள் என ஆய்வு மேற்கொள்ள இத்தனை பேர் உள்ளனர். ஆனால் நாங்களும் அந்த பணிகளை செய்வோம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் த.வெ.க.வினர் கிளம்பி இருப்பதை பார்க்கும் போது தமிழ்நாடு அரசையே கேலிக் கூத்தாக்கியுள்ளது.

**வரம்பு மீறும் த.வெ.க.வினர்!**

குறிப்பாக, தென்காசி மாவட்டத்தில் அரசு மருத்துவமனையில் த.வெ.க. மருத்துவரணி என்ற பெயரில் டாக்டர்களுக்கான கோட்டை போட்டுக்கொண்டு சிலர் ஆய்வு செய்ததும், கன்னியாகுமரியில் பேரூராட்சி அலுவலகத்தில் சென்று த.வெ.க.வினர் அத்துமீறி ஆவணங்களை எடுத்ததும் காவல் நிலையம் வரை புகார் சென்றுள்ளது. அடுத்ததாக, அணைக்கட்டு அரசு மருத்துவமனைக்குள் த.வெ.க. மாவட்டச் செயலாளர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கும்பலாக அத்துமீறி நுழைந்து, “நான் அமைச்சர் அதிகாரத்திற்கு உரியவன்” என கூறி அதிகாரிகளை மிரட்டியதாக சர்ச்சைகள் எழுந்தன. அதேபோன்று, கிருஷ்ணகிரி மற்றும் பிற பகுதிகளில் நடந்த த.வெ.க. கொடியேற்று விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தொண்டர்கள் சிலர் வரம்பு மீறி நடந்து கொண்ட காட்சிகள் இணையத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தின.

மேலும், பாரம்பரிய திருவிழாக்களில் த.வெ.க.வினர் கொடியை வைத்துக் கொண்டு செய்த அலப்பறைகள் தொடர்பான வீடியோக்களும் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டன. அதோடு விட வில்லை, துணை சபாநாயகராக தேர்வு செய்யப்பட்ட ரவிசங்கர் தான் பதவி ஏற்ற பின்பு தலைமைச் செயலகத்தில் உள்ள தனது அறைக்கு சென்றார். அப்போது அவரது நண்பர்கள், துணை சபாநாயகரின் இருக்கை எவ்வளவு பாரம்பரியமிக்கது என்பதை கூட அறியாதவர்களாக அதன் மீது உட்கார்ந்து ரீல்ஸ் எடுத்து வெளியிட்டதும் கடும் கண்டனத்துக்குள்ளாகியது. இவ்வாறு த.வெ.க. நிர்வாகிகள் சிலர் கட்சியின் பெயரையும், தங்களின் புதிய பதவிகளையும் தவறாகப் பயன்படுத்தி அரசு அதிகாரிகளை மிரட்டுவதும், பொதுமக்களுக்கு இடையூறு செய்வதும் விமர்சனத்திற்குள்ளாகி வருகிறது.

**விரைவில் முற்றுப்புள்ளி!**

ஆட்சிக்கு வந்து சில வாரங்கள் மட்டுமே நிறைவடைந்த நிலையில் தொண்டர்களின் அடாவடிக்கு முதல்வர் விஜய் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற விமர்சனங்கள் சமூக வலைதளங்களில் கொடிகட்டி பறக்க தொடங்கியுள்ளது. இதன் எதிரொலியாக, தமிழக வெற்றி கழக (த.வெ.க.) தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் எல்லை மீறி நடந்து கொள்ளும் சில சம்பவங்கள் சமூக வலைத்தளங்களில் ‘அலப்பறை’ என விமர்சிக்கப்பட்டு வைரலாகி வருகின்றன. இந்நிலையில், அரசு விவகாரங் களில் த.வெ.க.வினர் தலையிடக்கூடாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அதிரடி உத்தரவு பிறப்பித்தார். ஆனால் அவரது அறிவுரைகளை எந்த ஒரு த.வெ.க.வினரும் கண்டுகொள்ளவில்லை என்பதை இன்னொரு சம்பவமும் உறுதிபடுத்தியுள்ளது.

அதாவது, சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டலக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. இதுபோன்ற மாதாந்திர கூட்டத்தில் மண்டலக்குழு தலைவர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொள்வது வழக்கம். எந்த ஒரு அரசியல் கட்சியினரும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி இல்லாத நிலையில், இந்த கூட்டத்தில் சோழிங்கநல்லூர் எம்.எல்.ஏ. பி.சரவணமூர்த்தி கலந்து கொண்டார். அவருடன் சேர்ந்து த.வெ.க. கட்சியினர், கூட்டம் நடைபெறும் அரங்கிற்குள் உள்ளே புகுந்து ரீல்ஸ் எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அதேபோல் த.வெ.க. கட்சியைச் சேர்ந்த ஒருவர் மைக்கில் சோழிங்கநல்லூர் தொகுதி முழுவதும் உள்ள சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

**ரீல்ஸ்ஸில் த.வெ.க. ஆட்சி!**

அரசு அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்களுக்குள் நடைபெறும் கூட்டத்தில் த.வெ.க.வினர் சுமார் 20க்கும் மேற்பட்டோர் அனுமதியின்றி உள்ளே புகுந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டு அதிகாரிகள் போன்று அதிகாரம் செய்தனர். எம்.எல்.ஏ. ஒருவர் மண்டலக்குழுக் கூட்டத்திற்குள் தனது ஆதரவாளர்களை அழைத்து சென்றதும், அதிகாரிகள் நாற்காலியில் அமர்ந்து கொண்டு அதிகாரம் செய்ததும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மத்தியில் முகம் சுளிப்பை ஏற்படுத்தியது. அரசு நிர்வாகத்தில் த.வெ.க. கட்சியினரின் இந்த தலையீடு மற்றும் அத்துமீறல்கள் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது த.வெ.க.வினர் தங்களை எம்.எல்.ஏ.க்களாகவே நினைத்துக் கொண்டு ஆய்வில் இறங்கியுள்ளனர். இன்னும் முதல்வரின் பணிகளையும் அடுத்த சில நாட்களில் செய்வதற்கு த.வெ.க.வினர் தயங்க மாட்டார்கள் என்ற கேலி கிண்டல் இணைதள மீம்ஸ்கள் வைரலாகி வருகிறது. ஆட்சிக்கு வந்து ஒரு சில வாரம் மட்டுமே நிறைவடைந்த நிலையில் தொண்டர்களின் அடாவடிக்கு முதல்வர் விஜய் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**காற்றில் பறந்த புஸ்ஸி உத்தரவு!**

த.வெ.க.வினரின் அத்துமீறல்களுக்கு முடிவு கட்டும் வகையில், அரசு விவகாரங்களில் தவெகவினர் தலையிடக் கூடாது என்றும், த.வெ.க.வினர் தங்களுடைய எல்லை என்ன என்பதை அறிந்து செயல்பட வேண்டும் என்றும் மக்கள் பிரதிநிதிகள் அல்லாதோர் அரசு சார்ந்த விவகாரங்களில் தலையிடவோ, ஆய்வுகளை மேற்கொள்ளவோ கூடாது என த.வெ.க. பொதுச்செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் உத்தரவிட்டார். இவ்வளவு களேபரத்துக்கு இடையில் அவர் உத்தரவு போட்ட அடுத்த சில நிமிடங்களில் அந்த உத்தரவை மீறி கோவை பகுதியில் த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருவர் அதிகாரிகளை தனது வீட்டிற்கு வரவழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.



அந்தியூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் எம்.சிவபாலன் அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சியில் வாக்களித்த வாக்காளர்களுக்கு வீதி வீதியாகச் சென்று நன்றியினை தெரிவித்தார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# கோவையில் சிறுமி கொலை:

# ‘ரீல்ஸ்’ ஆட்சியில் குழந்தைகளுக்குக் கூட பாதுகாப்பில்லை!

## தி.மு.க. மகளிர் அணி கண்டனம்!

சென்னை, மே 25 -

பிஞ்சுக் குழந்தைகளைக் கூட காப்பாற்ற முடியாத அளவுக்குத் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு அடியோடு சீரழிந்துவிட்டதாக தி.மு.க. மகளிரணி குற்றம்சாட்டியுள்ளது.

தி.மு.க. மகளிரணி வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில்,

த.வெ.க ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் முழுமையான பாதுகாப்பு இருக்கும் என்று, மேடைகளில் விஜய் வீர வசனம் பேசியது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

கோவை சூலூரில் கடத்தப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப் பட்ட 10 வயது பிஞ்சுச் சிறுமி, விஜய் அங்கிள் எங்க இருக்கீங்க? பெண் குழந்தைகளுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லையா என்று கேள்வி எழுப்புவதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்தக் கேள்விக்கு இப்போது என்ன பதில் சொல்லப்போகிறீர்கள் என்று முதலமைச்சர் விஜய்க்கு கேள்வி எழுப் பி யுள்ள தி.மு.க. மகளிரணி, பிஞ்சுக் குழந்தைகளைக் கூட காப்பாற்ற முடியாத அளவுக்குத் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு அடியோடு சீரழிந்துவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளது.

உங்களுடைய ‘மாற்றம்’ என்ன என்பதை ஒரே வாரத்தில் மக்களுக்கு உணர்த்திவிட்டீர்கள் என்றும் முதல மைச்சர் விஜயை தி.மு.க. மகளிரணி கடுமையாக விமர்சித்துள்ளது.